www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கர்நாடக சங்கீதம் Music | Three Hours / Gr -12 (2023) | 55 | T | I,II |

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. "பொன்னும் மெய்ப் பொருளும்" என்ற தேவாரம் அமைந்துள்ள பண்.
   1) புறநீர்மை   2) நட்டபாடை   3) தக்கேசி
   4) காந்தாரம்   5) குறிஞ்சி

02. "சங்கீத சாராம்ருதம்" என்னும் நூலை எழுதியவர்.
   1) கோவிந்தாச்சாரியார்   2) வெங்கடமகி   3) ஜெயதேவர்
   4) துளஜா மகாராஜா   5) சாரங்கதேவர்

03. பின்வரும் மேள எண்களில் இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் மேள எண்.
   1) 40   2) 39   3) 42   4) 41   5) 30

04. 20 வது மேளத்தில் இருந்து பிறந்த பஞ்சம வர்ஜ ராகம்.
   1) ஹிந்தோளம்   2) ஆபோகி   3) ஸ்ரீறஞ்சனி   4) வசந்தா   5) ஆபேரி

05. "ஸிதார்" வாத்தியத்தில் கர்நாடக இசையை வாசித்தார்.
   1) பீதோவன்   2) வீணைபாலச்சந்தர்
   3) திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை   4) ராஜ மாணிக்கம் பிள்ளை
   5) P.S ஆறுமுகம் பிள்ளை

06. "கன, நய, தேசிய" பாடும் முறையில் சிறந்து விளங்கியவர்.
   1) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்   2) அருணகிரிநாதர்   3) சோபனாத்ரி
   4) சுவாதித்திருநாள் மகாராஜா   5) தீட்ஷதர்

07. ஒரு ஸ்வரத்தை இடைவிடாமல் சொல்வது.
   1) லங்கணம்   2) அனப்யாசம்   3) அல்பத்துவம்
   4) அப்பியாசம்   5) பகுத்துவம்

08. சிட்டை ஸ்வரத்தின் இடையிடையே ஜதிகள் அந்தந்த ஸ்வரங்களின் இசைக்குப் பாடப்படும் அணியானது?
   1) சொற்கட்டு சாகித்யம்   2) சொற்கட்டு ஸ்வரம்   3) மகுடசாகித்யம்
   4) மத்திமகால சாகித்யம்   5) மணிப்பிரவாளம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09. “ஸாபாஸா” என்னும் அழகிய பிரயோகத்தையுடைய வக்ர ஷாடவ சம்பூர்ண இராகம்.
   1) ஆனந்தபைரவி  2) கானடா  3) பேகட
   4) கேதாரம்  5) ஸாவேரி

10. “பல்லவி சேஷ்ய்யரால்” எட்டு மணி நேரம் பாடப்பட்ட இராகம்
   1) ஹிந்தோளம்  2) வசந்தா  3) ஸாவேரி
   4) ஆனந்தபைரவி  5) தோடி

11. கிருதியின் ஸ்தாயி எல்லை.
   1) $1\frac{1}{2}$ - 2 ஸ்தாயி  2) $2 - 2\frac{1}{2}$ ஸ்தாயி  3) $1 - 2\frac{1}{2}$ ஸ்தாயி
   4) $2 - 3\frac{1}{2}$ ஸ்தாயி  5) 3 ஸ்தாயி

12. விவாதி தோசமற்ற இராகங்கள்.
   1) 72  2) 40  3) 32  4) 36  5) 30

13. சக்கரத்திற்குச் சக்கரம் மாறுபடுகின்ற ஸ்வரங்கள்
   1) தைவதம், நிஷாதம்  2) ரிஷபம், தைவதம்  3) ரிஷபம், காந்தாரம்
   4) காந்தாரம், நிஷாதம்  5) ரிஷபம், நிஷாதம்

14. வாய்மொழி இலக்கியம் எனப்படும் பாடல் வகை
   1) மெல்லிசைப் பாடல்  2) தேவாரம்  3) நாட்டார் பாடல்
   4) தேசியப் பாடல்  5) கீர்த்தணை

15. சண்முகப்பிரியா இராக கீர்த்தணையில் “கைலாசவாசனே” என்னும் அடிகளுக்கு அடுத்து வருவது.
   1) தீனசரண்யனே  2) ஜகதீசா  3) சந்ரசேகரனே
   4) சங்கரனே  5) கருணாகரனே

16. கடபஜாதி விதிமுறைக்குப் புறம்பாக அமைந்துள்ள இராகங்களுள் ஒன்று.
   1) சக்கரவாகம்  2) ஷண்முகப்பிரியா  3) தர்மவதி
   4) காந்தாமணி  5) நீதிமதி

17. “சங்கீதப் பிரதானமான உருப்படி
   1) தில்லானா  2) பதம்  3) ஜாவளி
   4) கிருதி  5) அஷ்டபதி

18. ஹிந்தோள இராகத்தைப் பற்றி சிறப்பாகக் கூறப்பட்ட நூல்.
   1) இராக தாள சிந்தாமணி  2) சதுர்த்தண்டிப் பிரகாசிகை  3) சங்கிரக சூடாமணி
   4) சங்கீத சாராம்ருதம்  5) சங்கீத சுதாகரம்

19. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வரும் இசையணி.
   1) ஸ்வராட்சர அணி  2) மத்திமகால சாகித்தியம்  3) அனுபிராச அணி
   4) மணிப்பிரவாளம்  5) சொற்கட்டு சாகித்தியம்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

20. விளம்பகால இசையை மிகவும் சிறப்பானகக் கொண்ட இசைக்கருவி.
   1) வீணை  2) வயலின்  3) கோட்டு வாத்தியம்
   4) புல்லாங்குழல்  5) ஸிதார்

21. நாற்பதினாயிரம் ராகங்களின் இலட்சணங்களை அறிந்த பெருமைக்குரியவர்.
   1) சுவாதித்திருநாள் மகாராஜா  2) தியாகராஜசுவாமிகள்  3) பைடால குருமூர்த்தி சாஸ்திரி
   4) வீணை பாலசந்தர்  5) வேங்கடமகி

22. “Marriage of figaro” எனும் நூலினை எழுதியவர்.
   1) மொஸாட்  2) பாக்  3) அமீர்குஸ்ரு
   4) பீதோவன்  5) பாத்கண்டே

23. செய்முறை விளக்கத்தோடு கூடிய சொற்பொழிவாற்றும் திறமையுள்ளவர்.
   1) எம் எல் வசந்தகுமாரி  2) வீணை பாலசந்தர்
   3) திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை  4) க.செ. நடராஜா
   5) M.S சுப்புலட்சுமி

24. “குரு” ஒருவர் இல்லாமலே தம் இசைத் திறமையைப் பெருக்கிக் கொண்டவர்.
   1) எம் எல் வசந்தகுமாரி  2) நிர்மலா ஸ்ரீ நிவாசன்  3) சுதாரகுநாதன்
   4) வீணை பாலச்சந்தர்  5) லீலா ராமமூர்த்தி

25. இராகங்களின் வடிவம் அழிந்து போகாமல் இருப்பதற்குக் காரணமாகவுள்ள உருப்படி.
   1) தில்லானா  2) பதம்  3) ஜாவளி
   4) கிருதி  5) கீர்த்தணை

(25X1=25புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) கோட்டு வாத்தியத்தில் வாசிக்கக் கூடிய ஸ்தாயி எல்லை யாது?
   2) ஏகஸ்ருதி தைவதம் வரும் இராகம் எது?
   3) கடபஜாதி சக்கர அமைப்பில் அடங்கியுள்ள பிரிவுகள் எத்தனை?
   4) ஆனந்தபைரவி இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரம் எது?
   5) வடநாட்டிலிருந்து வந்த இன்மையான இராகம் எது?
   6) நிஷாதாந்திய ராகம் ஒன்று தருக.
   7) 72 மேளச்சக்கரத்தில் இராகத்திற்கு இராகம் மாறுபடும் ஸ்வரங்கள் எவை?
   8) ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் இடம்பெறும் அணி யாது?
   9) வீணைத்தந்திகளை விட கோட்டுவாத்தியத்திலுள்ள மேலதிகத் தந்தி எது?
   10) வீணை பாலச்சந்தரின் இசைத் தட்டுக்களில் அவருடன் இணைந்து தீட்ஷிதரின் நவக்ரக கிருதிகளைப் பாடி வாசித்தவர் யார்?
   11) ஆபோகி, மோகணம், ஹம்சத்வனி ஆகிய இராகங்கள் வர்ஜ ராகப் பிரிவில் எவ் வகையைச் சேர்ந்தது.
   12) ஸாவேரி இராகம் வெளிப்படுத்தும் இரசம் யாது?
   13) சண்முகப்பிரியா இராகத்தின் மேள எண் யாது?
   14) ஸகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம் யாது?
   15) ஸிதார், தபேலா போன்ற வாத்தியங்களை உருவாக்கியவர் யார்?

(15 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

02. 1) 72 மேளகர்த்தாவில் ஒரு சக்கரத்தில் உள்ள 6 இராகங்களின் சங்கேத அட்சரங்கள் எவை? (3 புள்ளிகள்)

2) 12 சக்கரங்களின் பெயர்களைத் தருக. (6 புள்ளிகள்)

3) வேத சக்கரத்திலுள்ள இராகங்கள், மேள எண்கள், ஸ்வரஸ்தானங்கள் என்பனவற்றை அட்டவணைப்படுத்துக. (6 புள்ளிகள்)

(3 + 6 + 6 = 15 புள்ளிகள்)

03. பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.

1) சியாமா சாஸ்திரிகளின் சொத்து என வர்ணிக்கப்படும் இராகம் (2 புள்ளிகள்)

2) பல்லவி சேஷய்யரால் 8 மணிநேரம் பாடப்பட்ட இராகம் (13 புள்ளிகள்)

(2 + 13 = 15 புள்ளிகள்)

04. 1) கிருதியின் இலட்சணத்தைத் தருக. (7 புள்ளிகள்)

2) கிருதியை இயற்றியவர் இருவர் பெயர் தருக. (4 புள்ளிகள்)

3) கிருதிக்கு உதாரணங்கள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

(7 + 4 + 4 = 15 புள்ளிகள்)

05. 1) “சீனிவாசராவ்” என்பவரால் முதன் முறையாக வாசிக்கப்பட்ட இசைக்கருவி யாது? (2 புள்ளிகள்)

2) இவ் வாத்தியத்தினை வரைந்து பாகங்களைக் குறிக்குக. (6 புள்ளிகள்)

3) இவ் வாத்தியத்தின் அமைப்பு, சிறப்பு, வாசிக்கும் முறை என்பவற்றினைத் தருக. (6 புள்ளிகள்)

4) இவ் வாத்தியம் வாசிப்பதில் சிறப்புப் பெற்ற இருவர் பெயர்களைத் தருக. (1 புள்ளிகள்)

(2 + 6 + 6 + 1 = 15 புள்ளிகள்)

06. “பைடால குரு மூர்த்தி” சாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் தருக. (15 புள்ளிகள்)

07. மொஸாட்டின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் விரிவாகத் தருக. (15 புள்ளிகள்)



agaram.lk